பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 09 2026 TUESDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. எதிர்கால இந்தியாவை உருவாக்குவதில் பொறியாளர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில், kishau அணை திட்டம் தொடர்பாக ஆலோசனை கூட்டம் இன்று நடைபெறுகிறது.
3. இந்தியாவில் ஜனநாயகம், நாகரீக நெறிமுறைகளுடன் வேரூன்றியுள்ளதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.
4. வெளிநாட்டு மாணவர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோர் அமெரிக்காவில் தங்குவதற்கான கால அவகாசத்தை நிர்ணயிப்பதற்கான சட்டத்திற்கு அந்நாட்டு நீதிமன்றம் தற்காலிக தடை விதித்துள்ளது.
5. செஸ் ஒலிம்பியாட் போட்டி, உஸ்பெகிஸ்தானின் Samarkhand-ல் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

--------------

இந்திய பொறியியலின் தந்தை என்று போற்றப்படும் Visvesvaraya-வின் பிறந்த தினம் இன்று தேசிய பொறியாளர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், எதிர்கால இந்தியாவை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கும் பொறியாளர்களுக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

பொறியியல் துறை வளர்ச்சியில் Visvesvaraya-வின் பங்கு இன்றைய தலைமுறையினருக்கு ஊக்கமளிப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், நாட்டை கட்டமைப்பதில் Visvesvaraya-வின் பங்கு முக்கியமானது என்று தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள பதிவில், Visvesvaraya-வின் வாழ்க்கை பொதுசேவைக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாக கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாட்டின் பொறியியல் துறையில் Visvesvaraya-வின் பங்களிப்பு இன்றியமையாதது என்று கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு பங்காற்றும் அனைத்து பொறியாளர்களுக்கும் தாம் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

--------------

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில், புதுதில்லியில் இன்று kishau அணை திட்டம் தொடர்பாக ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இதில், மத்திய மின்சாரத்துறை அமைச்சர் திரு.மனோகர் லால், ஜல்சக்தி அமைச்சர் திரு. C R Patil, ஹிமாச்சல் பிரதேசம் முதலமைச்ர் திரு Sukhvinder Singh,

உத்தராகாண்ட் முதலமைச்சர் திரு. Pushkar Singh உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர். உத்தரப்பிரதேசம், ஹரியானா, ராஜஸ்தான், முதலமைசர்களும், தலைமை செயலர்களும், காணொலி மூலம் பங்கேற்க உள்ளனர்.

இந்த kishau அணை திட்டம் மத்திய அமைச்சரவையின் ஒப்பதலுக்கு பின்னர் செயல்படுத்தப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தின் செலவில் 90 சதவீதம் மத்திய அரசும், 10 சதவீதம் 6 மாநில அரசுகளும் பங்கிட உள்ளது.

--------------

பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு மையமும், தொழில் நிறுவனங்களுக்கும் இடையேயான இந்தியா ஒப்பந்தங்கள் மூலம் ராணுவ தளவாடங்கள் உற்பத்தி மையமாக உருவெடுக்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஏவுகணை, ரேடார், போர் விமானங்கள், நீர்மூழ்கி கப்பல்கள் உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும்

பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் சிறப்பாக செயல்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

ராணுவ தளவாடங்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய நாட்டின் தொழில் நிறுவனங்களும் முன்வர வேண்டும் என்று திரு.ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டார்.

--------------

இந்தியாவில் ஜனநாயகம், நாகரீக நெறிமுறைகளுடன் வேரூன்றியுள்ளதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

சர்வதேச ஜனநாயக தினத்தை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடாக இந்தியா திகழ்வதாக தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பாரம்பரியத்தில், ஜனநாயக நெறிமுறைகள் பின்பற்றி வந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரிக் வேதத்தில் சபா, சமிதி, மக்கள் கூட்டங்கள் செயல்பட்டு வந்ததை அவர் எடுத்துரைத்துள்ளார்.

வைஷாலி போன்ற பழமையான நகரங்களில் மக்களாட்சி நடைபெற்றதற்கான சான்றுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாரம்பரிய மக்கள் கூட்டத்திலிருந்து, மிகப் பெரிய ஜனநாயக நாடாக உருவெடுத்த இந்தியாவின் பயணம் பாராட்டத்தக்கது என்று திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

--------------

ஆராய்ச்சி ஆவணங்களை சிறு காணொளிகளாக மாற்றுவதற்கான செய்தியை தேசிய அறிவியல் தொலைதொடர்பு ஆராய்ச்சி மையம் உருவாக்கியுள்ளது.

இது தொடர்பாக மத்திய அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், Saral AI செயற்கை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, கானொளிகளை உருவாக்க உள்ளதாக தெரிவித்தது.

அறிவியல் ஆராய்ச்சி தொடர்பான தகவல்கள் எளிதாக பெறும் வகையில், இந்த செயலி வழிவகை செய்ய உள்ளது.

--------------

தீர்ப்பாயங்களில் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஓய்வுபெற்றால், அவர்களின் பதவிக்காலம் நீடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி Suryakanth, நீதிபதிகள் Joymalya, Mohana அடங்கிய அமர்வு உறுப்பினர்களின் ஓய்வு பெறுவதன் மூலம் தீர்ப்பாயங்கள் செயல்படாமல் இருக்கும் நிலை ஏ7ற்பட கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பாயங்களில் ஒருமாதம் வரை பதவிக்காலம் நீட்டிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

--------------

மேற்குவங்கத்தில் அடுத்த மாதம் 6-ம் தேதி நடைபெற உள்ள சட்டப்பேரவை இடைத்தேர்தலில் போட்டியிட உள்ள வேட்பாளர்களை பிஜேபி அறிவித்துள்ளது.

Reji Nagar தொகுதியிலிருந்து திரு. Sakharav Sarkar-ம், Nandigaram தொகுதியிலிருந்து Hasirani Rath-ம் போட்டியிட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் மதுராந்தகம், தாராபுரம், புதுச்சேரியின் தட்டான்சாவடி உட்பட 5 சட்டப்பேரவை தொகுதிகளில், அடுத்த மாதம் 6-ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

வேட்புமனுதாக்கல் செய்ய நாளை கடைசி நாள் ஆகும். வேட்புமனுக்கள் நாளை மறுநாள் பரசீலிக்கப்படும்.

வேட்புமனுக்களை திரும்பப்பெற 19-ம் தேதி கடைசி நாள் ஆகும்.

--------------

தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் 67-வது நிறுவன நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

கடந்த 1959 ஆம் ஆண்டில் இதே நாள் அப்போதைய குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் தூர்தர்ஷன் தொலைக்காட்சி தொடங்கி வைத்தார்.

அகில இந்திய வானொலியின்கீழ் செயல்பட்ட தூர்தர்ஷன் தொலைக்காட்சி, 1976 ஏப்ரல் 1-ம் தேதி முதல் தனியாக செயல்பட தொடங்கியது.

1982-ம் ஆண்டு நடைபெற்ற தில்லி ஆசிய விளையாட்டுப் போட்டிகள் வண்ணத்தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

கடந்த 1997 செப்டம்பர் 23-ம் தேதி முதல் பிரசார் பாரதியின் கீழ் தூர்தர்ஷன் தொலைக்காட்சியும், ஆகாஷ்வானியும் செயல்பட்டு வருகிறது.

தகவல் பறிமாற்றம், கலாச்சார பராமரிப்பு, தேசிய ஒருமைப்பாடு உள்ளிட்டவை குறித்து, தொடர்ந்து தூர்தர்ஷன் தொலைக்காட்சி சேவையாற்றி வருகிறது.

--------------

வெளிநாட்டு மாணவர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோர் அமெரிக்காவில் தங்குவதற்கான கால அவகாசத்தை நிர்ணயிப்பதற்கான சட்டத்திற்கு அந்நாட்டு நீதிமன்றம் தற்காலிக தடை விதித்துள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரித்த Massichusetts நீதிமன்ற நீதிபதி Dennis Saylor இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதத்தில் அமெரிக்க உள்துறை அமைச்சகம் கொண்டு வந்த இந்த சட்டத்தில், F-பிரிவு வெளிநாட்டு மாணவர்கள், J-பிரிவு பரிமாற்ற பயணிகள், I-பிரிவு வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் அமெரிக்காவில் தங்குவதற்கான காலஅவகாசம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இதற்கு எதிராக, பல்வேறு அமைப்புகள் வழக்குப் பதிவு செய்ததை அடுத்து நீதிமன்றம் இந்த தடையை விதித்துள்ளது.

--------------

இந்தியா-கனடா இடையேயான வர்த்தகத்தை 2030ஆம் ஆண்டுக்குள் 5 ஆயிரம் கோடி டாலராக அதிகரிப்பதற்கான பேச்சுவார்த்தை புதுதில்லியில் தொடங்கியது.

வரும் 18ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இந்த பேச்சுவார்த்தையில் சரக்கு மற்றும் சேவை, வர்த்தக தடைகள் உள்ளிட்டவற்றில் எளிதாக்குவது குறித்து முக்கியமாக விவாதிக்கப்படவுள்ளது.

இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகம், கடந்த நிதியாண்டில் 8 புள்ளி இரண்டு இரண்டு சதவீதம் குறைந்து, 795 கோடி டாலராக இருந்தது.

இந்தியாவிலிருந்து கனடாவிற்கு மருந்து பொருட்கள், மீன், பருத்தி ஆடைகள், மின்னணு பொருட்கள், ரசாயனம், எஃகு உள்ளிட்டவை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கனடாவிலிருந்து பயறு வகைகள், நிலக்கரி, உரம், கச்சா எண்ணெய் உள்ளிட்டவை இறக்குமதி செய்யப்படுகிறது.

இந்தியாவிலிருந்து, தொலைத்தொடர்பு கணினி, தகவல் சேவை உள்ளிட்ட சேவைத் துறை ஏற்றுமதியும் நடைபெற்று வருகிறது.

கனடாவில் 4 லட்சத்து 25 ஆயிரம் இந்திய மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

--------------

Scotland, Wales, வடக்கு அயர்லாந்து, கூடுதல் தன்னாட்சி அதிகாரம் கிடைப்பதற்கு பிரிட்டனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக Wales தலைநகர் Cardiff-ல் நடைபெற்ற கூட்டத்தில், Scottish தேசிய கட்சி, Wales அமைச்சர் Plaid, வட அயர்லாந்து அமைச்சர் Sinn Fein ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

பிரிட்டனின் மாகாணங்களான Scotland, Wales, வடக்கு அயர்லாந்துக்கு முழு தன்னாட்சி கிடைக்க வேண்டும் என்று இந்த ஒப்பந்தத்தில் பிரதமர் Andy Burnham-மிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இருப்பினும், இதற்கு பிரிட்டன் ஒப்புதல் அளிக்கப் போவதில்லை என்று பிரதமரின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

--------------

செஸ் ஒலிம்பியாட் போட்டி, உஸ்பெகிஸ்தானின் Samarkhand-ல் இன்று தொடங்குகிறது.

இதற்கான ஒலிம்பியாட் ஜோதியை சர்வதேச செஸ் சம்மேளன பொறுப்பு தலைவர் விஸ்வநாதன் ஆனந்த், உஸ்பெகிஸ்தான் செஸ் வீரர் Javokhir Sindarov-விடம் பெங்களூவில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

வரும் 27ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில், சர்வதேச அளவில் சிறந்த செஸ் வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

--------------

>>>>>>><<<<<<